# எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம்: ஜூலை 14-ல் விண்ணில் பாய்கிறது



**சென்னை**: சந்திரயான்-3 விண்கலம் 14-ம்தேதி மதியம் 2.35 மணிக்கு விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.

நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக சந்திராயன் -2 விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்தது. இந்த விண்கலம் எல்விஎம்-3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3)ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 2019 ஜூலை 22-ல்விண்ணில் ஏவப்பட்டது. 2019 செப்டம்பரில் நிலவின் சுற்றுப்பாதையை சென்றடைந்தது. எனினும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திட்டமிட்டபடி லேண்டர் கலன் தரையிறங்காமல் நிலவில் மோதி செய லிழந்தது.

அதேநேரம் விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆர்பிட்டர் நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. தற்போது ஆர்பிட்டர் நிலவை சுற்றி வந்து ஆய்வு செய்வதுடன், பல்வேறு அரிய படங்களையும் அனுப்பி வருகிறது. இந்நிலையில் சந்திரயான்-3 திட்டத்தை சுமார் ரூ.615 கோடியில் செயல்படுத்த 2020-ம் ஆண்டு இஸ்ரோ முடிவு செய்தது. ஏற்கெனவே ஆர்பிட்டர்

நிலவை சுற்றி வருவதால் இந்த முறை லேண்டர், ரோவர் கலன்கள் மட்டும் அனுப்பப்பட உள்ளன.

இதற்கிடையே சந்திரயான் விண்கலத்தை ஜூலை 13-ல் விண்ணில் செலுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. ஆனால், தற்போது ராக்கெட் ஏவுதல் தேதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி சந்திரயான்-3 விண்கலமானது எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து ஜூலை 14-ம் தேதி மதியம் 2.35 மணிக்கு விண்ணில் ஏவப்படும் என இஸ்ரோ அறிவித்துள்ளது.

## கூட்டுறவு தயாரிப்பு பொருட்களுக்கான செயலி அறிமுகம்: அமைச்சர் பெரியகருப்பன் தொடங்கிவைத்தார்




சென்னையில் நேற்று கூட்டுறவுச் சந்தை செயலியை அறிமுகப்படுத்தினார் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன். உடன், துறைச் செயலர் டி.ஜெகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன், கூடுதல் பதிவாளர் விஜயராணி உள்ளிட்டோர்.

**சென்னை:** கூட்டுறவு தயாரிப்பு பொருட்களுக்கான செயலியை அமைச்சர் பெரிய கருப்பன் அறிமுகப்படுத்தி, தொடங்கிவைத்தார்.

கூட்டுறவு நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பொருட்களை எளிதாக சந்தைப்படுத்தவும், பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையிலும் ஏதுவாக தற்போது ‘கூட்டுறவு சந்தை’ எனும் செல்போன் செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செயலியை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சென்னை தலைமை செயலகத்தில் நேற்று தொடங்கிவைத்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: கூட்டுறவு சங்கங்கள் மூலம்உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கடைகளுக்கு வந்துதான் வாங்கவேண்டும் என்கிற நிலையை மாற்றி, நுகர்வோர் எளிதாக அவர்களது இல்லங்களில் இருந்தே பொருட்களை பெறுகின்ற வகையில் இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது. முதல்கட்டமாக 8 சங்கங்களின் உற்பத்திபொருட்கள் இதில் சந்தைப்படுத்தப்பட உள்ளன.

இச்செயலி மூலம் 64 வகையான பொருட்கள் பட்டியலிடப்பட்டு, ஆர்டர் செய்யப்படும்போது, அவரவர் இருப்பிடங்களுக்கு உணவுப்பொருட்கள் கொண்டுவந்து சேர்க்கப்படும். இத்திட்டம் நடப்பாண்டுசட்டப்பேரவை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இச்செயலியில் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் தயாரித்த 44 வகையான மளிகை பொருட்கள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் 20 வகையான உயர்தர நுண்ணூட்டச் சத்துகள், உயிரி உரங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் நீரில் கரையும் உரங்கள் என மொத்தம் 64பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன.

இச்செயலியை பொதுமக்கள்அனைவரும் பயன்படுத்தி தரமான கூட்டுறவு தயாரிப்புகளை பெற்று பயனடையுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கூட்டுறவுத்துறை செயலர் டி.ஜெகநாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன், கூடுதல் பதிவாளர்கள் விஜயராணி, வில்வசேகரன், கே.வி.எஸ்.குமார், சுப்பிரமணியன், மிருணாளினி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நபார்டு வங்கி தலைமை பொதுமேலாளர் பொறுப்பேற்பு



ஆர்.சங்கர் நாராயண்

**சென்னை:** தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி நபார்டு வங்கியின் புதிய தலைமை பொது மேலாளராகஆர்.சங்கர் நாராயண் பொறுப்பேற்றுள்ளார்.

மேம்பாட்டு வங்கியியலில் 35 ஆண்டுகள் அனுபவம் பெற்றஇவர், உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் வணிகவியலில் முதுகலைப் பட்டமும் இந்திய வங்கியாளர்கள் நிறுவனத்தின் சார்ட்டர்ட் அசோசியேட் பட்டமும் பெற்றவர்.

கேரள நபார்டு வங்கியில் தனது பணியைத் தொடங்கிய சங்கர் நாராயண், தமிழ்நாடு, ஆந்திரா,மகாராஷ்டிரா, குஜராத், உத்தரபிரதேசம் என பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

மதுரை நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளராக பணியாற்றியபோது, அந்த மாவட்டத்தில் சுங்குடி சேலைகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், குறு நிறுவனங்கள், நீர்வடிப் பகுதிகள் போன்றவற்றின் வளர்ச்சிக்கான பல முயற்சிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

தமிழ்நாடுமற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தனது பதவிக் காலத்தில் கிராமப்புற உள்கட்டமைப்பு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்களை கணினிமயமாக்கல், முழுமையான வளர்ச்சிக்கான விவசாயக் கடன்களை அதிகரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப் போவதாக சங்கர் நாராயண் தெரிவித்துள்ளார்.

## ஆசிய யு-20 பிரிவில் சிறந்த தடகள வீரராக செல்வ பிரபு தேர்வு




செல்வ பிரபு | கோப்புப்படம்

**சென்னை:** ஆசிய அளவில் 20 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் சிறந்த தடகள வீரராக தமிழகத்தை சேர்ந்த டிரிப்பிள் ஜம்ப் வீரர் செல்வ பிரபு தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு, வரும் 10-ம் தேதி தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய தடகள சங்கத்தின் 50-வது ஆண்டு கொண்டாட்ட விழாவின் போது விருது வழங்கப்பட உள்ளது. இந்த விருதை பெறும் முதல் தமிழக வீரர் என்ற

பெருமையை பெற உள்ளார் செல்வ பிரபு. கடந்த 2022-ம் ஆண்டு 20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப்பில் செல்வ பிரபு வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு வெளியே முதல் முறையாக தான்சானியாவில் சென்னை ஐஐடி வளாகம்




கோப்புப்படம்

**புதுடெல்லி:** இந்தியாவுக்கு வெளியே முதல் முறையாக தான்சானியா நாட்டின் ஜன்ஜிபார் மாகாணத்தில் சென்னை ஐஐடி வளாகம் வரவுள்ளது. இங்குவரும் அக்டோபர் மாதம் முதல் பட்டப்படிப்புகள் தொடங்கவுள்ளன என வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அரசு முறைப் பயணமாக தான்சானியா சென்றுள்ளார். அங்குள்ள ஜன்ஜிபார் மாகாணத்தில் சென்னை ஐஐடி புதிய வளாகம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைச்சர் ஜெய்சங்கர் முன்னிலையில் நேற்று முன்தினம் கையெழுத்தானது. இதில்

சென்னை ஐஐடி, இந்திய கல்வி அமைச்சகம், ஜன்ஜிபார் கல்வி அமைச்சகம் ஆகியவை கையெழுத்திட்டன.

இது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தான்சானியாவின் ஜன்ஜிபார் மாகாணத்தில் உள்ள ஐஐடி வளாகம் உலகத்தரத்திலான உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்படும். உலகளாவிய தேவையை கருத்தில்கொண்டு திறனை வளர்க்கும் நோக்கத்துடன் தான்சானியாவில் ஐஐடி வளாகம் அமைக்கப்படுகிறது. இந்திய உயர் கல்வி மற்றும் புத்தாக்கத்தில் உலகத்துக்கு முன்மாதிரியாக இது செயல்படும்.

இந்தியாவுக்கு வெளியே அமைக்கப்படும் முதல் ஐஐடி வளாகமாக இது இருக்கும். இந்தியா - தான்சானியா இடையேயான நீண்டகால நட்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த ஐஐடி வளாகம் அமையவுள்ளது. இது ஆப்பிரிக்கா மற்றும் இந்திய மக்கள் இடையேயான உறவில் இந்தியா கவனம் செலுத்துவதை நினைவுபடுத்துவதாக இருக்கும்.

சிறப்பாக செயல்படும் இந்திய பல்கலைக்கழகங்கள், வெளிநாடுகளில் கிளைகள் அமைக்க, தேசிய கல்விக் கொள்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தான்சானியா மற்றும் இந்தியா இடையேயான உறவை அங்கீகரிக்கும் வகையில், இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இங்கு வரும் அக்டோபர் முதல் பட்டப் படிப்புகளை தொடங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

இந்த தனிச்சிறப்பான நட்புறவு, சென்னை ஐஐடியை ஆப்பிரிக்காவில் மிக உயர்ந்த இடத்துக்கு கொண்டு செல்லும். ஆப்பிரிக்காவின் உயர்கல்வி தேவையையும் நிறைவேற்றும். இங்குள்ள பட்டப்படிப்புகள், பாடத்திட்டங்கள், மாணவர்கள் தேர்வு முறை உட்பட இதர விஷயங்களை சென்னை ஐஐடி முடிவு செய்யும். செலவினங்களை தான்சானியாவின் ஜன்ஜிபார் அரசு ஏற்கும்.

## மத்திய அரசின் புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 4.80 லட்சம் பேருக்கு அடிப்படைக் கல்வியை பயிற்றுவிக்க இலக்கு




**சென்னை:** புதிய பாரத எழுத்தறிவு திட்டத்தின்கீழ் தமிழகத்தில் நடப்பாண்டு 4.80 லட்சம் பேருக்கு அடிப்படைக் கல்வியை பயிற்றுவிக்க பள்ளிக்கல்வித் துறை திட்டமிட்டுள்ளது.

நாடு முழுவதும் கல்வி கற்காத 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தன்னார்வலர்களை கொண்டு அடிப்படை எழுத்தறிவு பயிற்றுவிப்பதற்காக மத்திய அரசால் 'புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம்'கடந்தாண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்த திட்டத்தின்கீழ் 2027-ம் ஆண்டுக்குள் 5 கோடி பேருக்கு கல்வி கற்பிக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரகத்தின் மூலம் இந்த திட்டம் கடந்த கல்வியாண்டு (2022-23) அமல்படுத்தப்பட்டது. இதன் மூலம் 5.28 லட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவு கல்வி வழங்கப்பட்டது.

தொடர்ந்து நடப்பாண்டு பாரத எழுத்தறிவுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியாகியுள்ளன. இதுதொடர்பாக பள்ளிசாரா

மற்றும் வயது வந்தோர் கல்வித் துறையின் இயக்குநர் மு.பழனிசாமி, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை விவரம்:

புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் நடப்பு கல்வியாண்டில் (2023-24) தமிழகத்தில் எழுத, படிக்க தெரியாத 15 வயதுக்கு மேற்பட்ட 4.80 லட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு கல்வியை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான வழிகாட்டுதல்கள் தற்போது வழங்கப்படுகின்றன. அதன்படி திட்டத்தை வரும் செப்டம்பர் தொடங்கி அடுத்தாண்டு பிப்ரவரி மாதம் வரை 6 மாதங்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரு நாளைக்கு 2 மணி நேரம் வீதம் 6 மாதங்களுக்கு 200 மணி நேரம் தன்னார்வலர்களை கொண்டு வகுப்புகள் நடைபெற வேண்டும். அதன்படி 15 வயதுக்கும் மேலான எழுத படிக்க தெரியாதவர்களை கண்டறிதல், தன்னார்வலர்கள் நியமனம் உட்பட பணிகளை இந்த மாதத்தின் 3-வது வாரத்துக்குள் முடிக்க வேண்டும்.

கற்போர்களுக்கு பயிற்சியின் இறுதியில் மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். இதற்கு தேவையான பணிகளை அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.